**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**
முன்னிலை : திரு.N.பாரதிராஜன், பி.ஏ., பி.எல்.,
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி**

2024 ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 05 ஆம் நாள் வியாழக்கிழமை
**இ.ம.எண்.03/2023 இன் அ.வ.எண்.165/2023**

1. ராதாமணி
2.சக்திவேல் ... மனுதாரர்கள்/வாதிகள்

/ எதிர் /

1. மாவட்ட ஆட்சியர், கோயமுத்தூர்
2. வட்டாட்சியர், ஆனைமலை
3. கிராம நிர்வாக அலுவலர்,
   குப்புச்சிபுதூர் கிராமம், ஆனைமலை
4. பேரூராட்சி செயல் அலுவலர், ஒடையகுளம்

... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது கடந்த 21.08.2024 அன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.T.மனோகர் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் அரசு வழக்கறிஞர் திரு.S.தேவசேனாதிபதி அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பிலும் எடுத்துரைக்கப்பட்ட வாதங்களின்படியும், ஆவணங்களின்படியும், இந்நீதிமன்றம் இன்று வழங்கிடும் கீழ்க்கண்ட....

**ஆணையுரை**

நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்பட்டு மனு சொத்துக்களின் பௌதீக தன்மையை பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்யக்கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 26, விதி 9 மற்றும் பிரிவு 151–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2)** இம்மனுவின் மனுதாரர்கள் அசல் வழக்கில் வாதிகள் ஆவார். வழக்கு ஏ மற்றும் பி அட்டவணை சொத்துக்கள் மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்டது. மனு சி

அட்டவணை சொத்தானது மனு ஏ அட்டவணை மற்றும் பி அட்டவணை சொத்திற்கான 40 அடி அகல வண்டித்தடமாகும். மேற்படி வண்டித்தடத்தை 60 ஆண்டுகலாக மனுதராா்களும் அவர்களது முன்னோர்களும் அனுபவித்து வருகிறார்கள். மேற்படி வண்டித்தடத்தை தவிர மனு ஏ மற்றும் பி அட்டவணை சொத்திற்கு வேறு வண்டித்தடம் இல்லை. மேற்படி வண்டித்தடமானது க.ச.எண்.532–ல் தென்வடலாக வந்து க.ச.எண்.550 கல்லாங்குத்து புறம்போக்கு வழியாக சென்று மனுதாரர்கள் பூமிகளை அடைகிறது. மேற்படி க.ச.எண்.550–ல் கண்ட நிலத்தை எதிர்மனுதாரர்கள் வேறு உபயேகத்திற்கு பயன்படுத்தும் விதமாக கனரக வாகன உதவியுடன் வண்டித்தடத்தை அழிக்க முயற்ச்சிக்கிறார்கள். மேற்படி வண்டித்தடத்தை அழித்துவிட்டால் மனுதாரர் தனது வழக்கை நிரூபிக்க இயலாது. எனவே நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்பட்டு மனுசொத்தின் பௌதீக தன்மையை பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்யகோரி மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) **எதிர்மனுதாரர்கள் தரப்பில்,** க.ச.எண்.550–ல் கண்ட கல்லாங்குத்து புறம்போக்கு நிலத்தில் மனுதாரர் உட்பட யாருக்கும் எந்த உரிமையும் இல்லை. அரசு மேம்பாட்டு திட்டத்தின் கீழ் வீடு இல்லாத ஏழை மக்களுக்கு பட்டா வழங்குவதற்காக மேற்படி நிலம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. மேற்படி சொத்தில் மனுதாரருக்கு எந்த உரிமையும் இல்லை என்பதால் மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும்.

4) இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை.

5) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை என்னவெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே.

6) **<u>பிரச்சினை</u>** :

இருதரப்பிலும் தாக்கல் செய்யப்பட்ட மனு, எதிருரை பரிசீலனை செய்யப்பட்டது. நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்பட்டு மனு சொத்துகளை பார்வையிட்டு அதன் பௌதீக தன்மையை குறித்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்யக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7) மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில், சி அட்டவணை சொத்தானது மனு ஏ மற்றும் பி அட்டவணை சொத்திற்கான 40 அடி அகல வண்டித்தடம் என்றும் மேற்படி வண்டித்தடமானது க.ச.எண்.532-ல் தென்வடலாக வந்து க.ச.எண்.550 கல்லாங்குத்து புறம்போக்கு வழியாக சென்று மனுதாரர்கள் பூமிகளை அடைகிறது என்றும் மேற்படி க.ச.எண்.550-ல் கண்ட நிலத்தை எதிர்மனுதாரர்கள் வேறு உபயேகத்திற்கு பயன்படுத்தும் விதமாக கனரக வாகன உதவியுடன் வண்டித்தடத்தை அழிக்க முயற்ச்சிக்கிறார்கள் என்றும் எனவே நீதிமன்ற ஆணையர் நியமிக்ககோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8) எதிர்மனுதாரர்கள் தரப்பில், அரசு மேம்பாட்டு திட்டத்தின் கீழ் வீடு இல்லாத ஏழை மக்களுக்கு பட்டா வழங்குவதற்காக மேற்படி நிலம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது என்று எதிர்வாதம் வைக்கப்பட்டுள்ளது. ஒரு சொத்து குறித்து எல்லைகள் தொடர்பாகவோ அல்லது பௌதீக தன்மை தொடர்பாகவோ ஆக்கிரமிப்பு தொடர்பாகவோ ஒரு தரப்பில் தெரிவிக்கப்படும் சங்கதிகளை மறுதரப்பினர் மறுக்கும் பட்சத்தில் அந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யலாம் என்பது நன்கு நிறுவப்பட்ட சட்ட விதியாகும். க.ச.எண்.550-ல் கண்ட நிலத்தை வேறு பயன்பாட்டிற்கு மாற்றுவதற்காக கனரக இயந்திரங்கள் கொண்டு எதிர்மனுதாரர்கள் வேலை செய்துவருவதாக மனுதாரர்கள் தரப்பில் கூறுப்பட்டுள்ளது. மேற்கண்ட சங்கதியை எதிர்மனுதாரர்கள் மறுக்கவில்லை. மேலும் க.ச.எண்.550-ல் வண்டித்தடம்

இல்லை என்றும் எதிர்மனுதாரர்கள் மறுக்கவில்லை. எதிர்மனுதாரர்கள் க.ச.எண்.550–ல் செல்லும் வண்டித்தடத்தை அழித்துவிட்டால் அந்த சொத்தில் வண்டித்தடம் சென்றுக்கொண்டு இருந்தது என்ற சங்கதியை தீர்மானிப்பது சிரமமாகும்.

9) ஆகவே, இவ்வழக்கில் நீதிமன்ற ஆணையர் நியமிக்கப்பட்டு வழக்கு சொத்தின் பௌதீக தன்மையை பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல செய்யப்பட்டால் அந்த அறிக்கை மேற்கண்ட சங்கதிகளை தெளிவுபடுத்தும் வகையிலும், இவ்வழக்கில் நியாயமான ஒரு முடிவை எட்டுவதற்கு உதவியாக இருக்கும். மேலும், இவ்வழக்கில் கண்ட பிரச்சனை குறித்து வாய்மொழி சாட்சியங்களை பெருமளவு குறைக்க உதவும். எனவே இம்மனுவில் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்படுவதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்பதால் இம்மனு அனுமதிக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவில், இம்மனு அனுமதிக்கப்பட்டு வழக்கறிஞர் **திரு.S.மிதுன்குமார் MS.No.1024/2019** என்பவர் நீதிமன்ற ஆணையராக நியமனம் செய்யப்பட்டு மேற்படி நீதிமன்ற ஆணையர் இருதரப்பிற்கும் அறிவிப்பு கொடுத்து மனு சொத்துக்களை பார்வையிட்டு அதன் பௌதீக தன்மை குறித்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்யுமாறு உத்தரவிடப்படுகிறது. நீதிமன்ற ஆணையரின் ஊதியம் ரூ.7000/– என நிர்ணயம் செய்யப்பட்டு மேற்படி, நீதிமன்ற ஆணையரின் ஊதியத்தை மனுதாரர்கள் வரும் 17.09.2024 அன்றோ அல்லது அதற்கு முன்போ வழங்க வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது.
அழைக்க: 17.09.2024

இவ்வாணையுரை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்து பிழை நீக்கம் செய்ததை 2024ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 05ம் நாளான இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

**ஒப்பம் /– (N.பாரதிராஜன்)**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

**மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :**

– இல்லை –

**ஒப்பம் /– (N.பாரதிராஜன்)**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

-----------------------------------

**அசல்/வரைவு ஆணையுரை**

இ.ம.எண்.03/2023 இன் அ.வ.எண். 165/2023

நாள் : 05.09.2024

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

பொள்ளாச்சி.

-----------------------------------